[2005 மார்ச் 14

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்து, அப்படி விளையாட்டுப் பொருட்கள் வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரையோடு அரசுக்கு அனுப்பப்பட்டால் அது பற்றி அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. அரசன்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் விடுதி வளாகத்தில் உடற்பயிற்சி மையம் தொடங்கும் எண்ணம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா? சில சட்டமன்ற உறுப்பினர்கள் நடப்பதற்கே சிரமப்படுகிறார்கள். அவர்கள் உடலை வாகாக வைத்துக்கொள்வதற்கு அது உதவியாக இருக்கும். அப்படிப்பட்ட எண்ணம் ஏதேனும் அரசுக்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோரிக்கை இருந்தால் பேரவைத் தலைவரிடம் சொல்லுங்கள்.

வினா எண் 147, திரு. வி.ஆர். ராஜாங்கம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

147—

சாத்தியாறு அணை

***24076—திரு. வி.ஆர். ராஜாங்கம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், தேவசேரி கண்மாய்க்கு சாத்தியாறு அணைத் தண்ணீர் கிடைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசின் ஆய்வில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2005 மார்ச் 14]

திரு. வி.ஆர். ராஜாங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் பகுதி என்பது மிகவும் பின்தங்கிய பகுதி. இந்தப் பகுதிக்கு சாத்தியாற்றிலிருந்து தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கும்படிக் கேட்டுக்கொண்டு, இந்த ஆண்டு இல்லாவிட்டாலும், அடுத்த நிதியாண்டில், அதாவது, 2006 ஆம் ஆண்டு தமிழகத்தில் முதலமைச்சராக மீண்டும் அன்பு தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) பொறுப்பேற்ற பின்னால், இத்திட்டத்தை நிறைவேற்றித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், கோணம்பட்டி கிராமத்தில் சாத்தியாறு ஓடையின் குறுக்கே கட்டப்பட்டுள்ள சாத்தியாறு ஓடை நீர்த்தேக்கம் 29 அடி கொள்ளளவு கொண்டது. தண்ணீர் திறப்பு விதிகளின்படி செப்டம்பர் 25 ஆம் தேதி பருவ மழை பெய்து சாத்தியாறு ஓடை நீர்த்தேக்கத்தில் போதுமான தண்ணீர் இருந்தால், 1,029 ஏக்கர் பழைய ஆயக்கட்டில் உள்ள 10 கண்மாய்களுக்கு பாதிக் கொள்ளளவு தண்ணீர் நிரம்பும்படி தண்ணீர் திறந்துவிட்டு, பாதி நிரம்பியவுடன் அணையின் நீர்மட்டம், ஆழம் 16 அடி இருந்தால், 412 ஏக்கர் புதிய ஆயக்கட்டுக்குத் தண்ணீர் வழங்காமல் பழைய ஆயக்கட்டுப் பகுதிகளுக்கு மட்டுமே நீர் வழங்கப்படவேண்டும். கடந்த பல ஆண்டுகளாக சரியான பருவத்தில் போதுமான அளவு பருவ மழை கிடைக்கப்பெறாததால் சாத்தியாறு ஓடை நீர்த்தேக்கத்திலுள்ள பழைய ஆயக்கட்டின் கீழுள்ள 10 கண்மாய்களுக்குப் போதிய தண்ணீர் வழங்க இயலவில்லை. இந்நிலை தொடர்ந்து நீடித்து வருவதால், மானாவாரி கண்மாயாகிய தேவசேரி கண்மாய்க்கு சாத்தியாறு நீர்தேக்கத்திலிருந்து தற்போது தண்ணீர் வழங்க சாத்தியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 148, திரு. த. ஆறுமுகம், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

148—

இலவச வீட்டுமனைப் பட்டா

***31692—திரு. த. ஆறுமுகம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—